# சைவநெறி

## தரம் -10

## அலகு 15

## திருமூலர்




தொகுப்பு : ச.மதுஷா

கே தெஹி சபுமல்கந்த தமிழ் மகா வித்தியாலயம்

திருமூலர்

அறிமுகம்

- யோகியாருள் ஒருவர்
- அட்டமாசித்திகள் கைவரப் பெற்றவர்கள் யோகியர் எனப்படுவர்.
- அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராக பெரியபுராணத்தில் போற்றப்படுகின்றார்.
- திருமந்திரத்தை இயற்றியவர்.
- போலித்தன்மையான சமய வாழ்வை கடிந்துரைக்கிறார்.
- தருமத்தை வலியுறுத்துகிறார
- “அன்பே சிவம்” திருமூலர் வலியுறுத்தும் பேருண்மையாகும்.
- திருமந்திரத்தின் சிறப்புக்கள்  சைவத்திருமுறையில் 10 ஆவது இடத்தில் வைத்து போற்றப்படுகிறது
- தந்திரங்கள் - 09
- பாடல்கள் - 3000
- திருமந்திரத்தின் மறு பெயர்களாக திருமந்திரமாலை, தமிழாகமம், தமிழ்மூவாயிரம், சுந்தரராகமம் காணப்படுகின்றது.
- திருமந்திரம் தோத்திர நூலாகவும் சாத்திர நூலாகவும் விளங்குகின்றது
- உயர்வான கருத்துக்களை மிக எளியமுறையில் எடுத்துரைக்கின்றது.

திருமந்திரத்தில் (தந்திரத்திரங்கள் ) கூறப்பட்டுள்ள விடயங்கள்  உலக வாழ்க்கைக்குத் தேவையான ஒழுக்கங்கள்.

- உள்பொருள் பற்றிய விளக்கங்கள்.
- ஆன்மாக்கள் இறைவனை அடைவதற்கு உதவும்மார்க்கங்கள்.
- சிவசின்னங்களின் முக்கியத்துவம்.
- குருலிங்க சங்கம வழிபாடு.
- முத்தி பற்றிய விடயங்கள்.

திருமூலர் தொடர்பான கதை

தமிழ்நாட்டிலே பொதிகை மலையில் சிறிது காலம் தங்கியிருப்பதற்காக கயிலையில் இருந்து புறப்பட்டார். காவிரி கரையில் வழக்கமாக பசுக்களை மேய்த மூலன் என்னும் இடையன் ஏதோ ஒருகாரணத்திற்காக இறந்து கிடந்தால் பசுக்கள் கூட்டமாக கண்ணீர் விட்டுக்கொண்டு இருந்தது. அவைகளின் துயரத்தை போக்க விரும்பி யோகியார் தன் உடலை மறைவாக வைத்துவிட்டு கூடுவிட்டு கூடு பாயும்சித்தின் மூலம் மூலனின் உடலில் புகுந்தார்.. மூலன் உயிர் பெற்று எழுந்ததாக கருதி பசுக்கள் மகிழ்ந்தன. பசுக்களை தங்கள் மேய்பனனின் வளவினுள் சென்று புகுந்தது. ஆனால் மூலன் உள்ளே புகாது அதனை பார்த்தபடியே இருக்க மூலனின் மனைவி

அவர் உள்ளே வராதது குறித்து வினாவினார். ஓன்றும் பேசாது யோகியார் அவ்விடத்தைவிட்டு நீங்கி பொது மடம் ஒன்றை அடைந்து யோக நிலையில் வீற்றிருந்தார். மூலனின் மனைவி ஒன்றும் அறியாதவளாய் மூலன் யோக நிலையுற்றார். இனி இவர் வாழக்கைக்குரியவர் அல்ல என்பதை உணர்ந்தாள். பின்னர் யோகியார் தன் உடலை தேடி சென்றார். உடலை காணாதவராய் திகைத்த யோகியார் அவ்விடம்பிலேயே இருந்து பிறவித்துன்பத்தை போக்கினார்.




நன்றி